## குடும்பம்

நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தாயிற்சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை

தந்தை தாய்ப் பேண்

அம்மா என்றால் அன்பு: அப்பா என்றால் அறிவு

அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்

குடும்பம் ஒரு கோயில் அதில் தாயும் தந்தையும் தெய்வங்கள்

## இளையர்கள்

இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்

இளங்கன்று பயமறியாது

துள்ளுகிற மாடு பொதி சுமக்காது

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

ஓடுகிற பாம்பை மிதிக்கின்ற வயது

உன்னையே நீ அறிவாய்

உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்
உலகத்தில் போராடலாம்

தூங்காதே தம்பி தூங்காதே

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

சிரித்து வாழவேண்டும்- பிறர்
சிரிக்க வாழக் கூடாது

நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே

## நண்பர்கள்- நட்பு

அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்

ஒரு சகோதரன் இல்லாமல் வாழமுடியும் - ஆனால்
ஒரு நண்பன் இல்லாமல் வாழமுடியாது

நல்லவர் நட்பு வளர்பிறை போன்றது
தீயவர் நட்பு தேய்பிறை போன்றது

உயிர் காப்பான் தோழன்

பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

துஷ்டரைக் கண்டால் தூர விலகு

## <u>நற்பண்புகள்</u>

நல்லவன் என்று பெயரெடுக்க நாள் செல்லும்

ஒழுக்கம் உயிரைவிட மேலானது

அன்பினால் ஆகாததும் ஆகும்

அன்பே கடவுள்

பொறுத்தார் பூமி ஆள்வார்

வலது கன்னத்தில் அறைந்தால் இடது கன்னத்தைக் காட்டு

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு

நன்றி மறப்பது நன்றல்ல

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது

## <u>முயற்சி - நம்பிக்கை - ஊக்கம்</u>

முயற்சி திருவினையாக்கும்

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

மனதில் உறுதி வேண்டும்

சிங்க நடை போட்டு சிகரத்தில் ஏறு
சிகரத்தில் ஏறி வானத்தில் ஏறு

முயன்றால் முடியாதது எதுவுமில்லை

யானையின் பலம் தும்பிக்கையிலே
மனிதனின் பலம் நம்பிக்கையிலே

தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

வெற்றிக் கொடி கட்டு: மலைகள் முட்டும் வரை முட்டு: லட்சியம் எட்டும் வரை எட்டு

உன்னால் முடியும் தம்பி

## **<u>உடல் நலம்</u>**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

சுத்தம் சோறு போடும்

சுத்தம் சுகம் தரும்

நோய்க்கு இடம் கொடேல்

சொர்க்கம் என்பது நமக்கு சுத்தம் உள்ள வீடுதான்.

வெள்ளம் வரும்முன் அணைபோட வேண்டும்.

சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய முடியும்.

## நாடு

நாடும் மொழியும் நமது இரு கண்கள்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே, நீ நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்.

நாட்டுக்கு உன்னை அர்ப்பணி
நாடு உனக்கு அடிபணியும்.

## ஒற்றுமை

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

கூட்டுறவே நாட்டுயர்வு

ஒரு கை தட்டினால் ஓசை வராது

தனிமரம் தோப்பாகாது

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.

ஐந்து விரலும் இணைந்தால் அது நம்பிக்கை
ஐந்து விரலும் பிரிந்தால் அது அவநம்பிக்கை